K

# முதல் திருப்புதல் தேர்வு - ஜனவரி 2020

பத்தாம் வகுப்பு பதிவு எண் | | | | | | | | |

நேரம்:3.00 மணி

## தமிழ்

(செய்யுள், உரைநடை)

மதிப்பெண்கள்:100

அறிவுரைகள்: (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப்பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப் பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்புகள்: (1) இந்த வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது

(2) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி -I

குறிப்புகள்: (1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15×1=15

(2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீடுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) 'வளி மிகின் வலி இல்லை' என்று ஐயூர் முடவனார் எதைப் பற்றிக் கூறியுள்ளார்?

அ) நீர் ஆ) நிலம் இ) காற்று ஈ) மழை

2) இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும் இனிது என
தமியர் உண்டலும் இலரே - என்று பாடியவர்

அ) நப்பூதனார் ஆ) இளம்பெருவழுதி
இ) இளங்கோவடிகள் ஈ) கம்பர்

3) 'சூவன்சௌ' என்னும் துறைமுக நகர் ________ நாட்டில் உள்ளது.

அ) ஜப்பான் ஆ) சீனா இ) ரோம் ஈ) இந்தியா

4) ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு என்கிறார் ________

அ) மணவை முஸ்தபா ஆ) ம.பொ.சி இ) திருமூலர் ஈ) கம்பர்

5) கலைஞாயிறு என்றழைக்கப்படுபவர் ________

அ) பாவாணர் ஆ) கண்ணதாசன் இ) நாகூர்ரூமி ஈ) ந. முத்துசாமி

6) ஒருவர் பேசுவது போல அமையும் ஓசை ________

அ) செப்பலோசை ஆ) அகவலோசை இ) தூங்கலோசை ஈ) துள்ளலோசை

7) முன்பனிக் காலத்தை பொழுதாக கொண்ட நிலங்கள்

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

8) தன்மை வினைகள் ________

அ) நான், யான் ஆ) வந்தேன், வந்தோம் இ) வந்தான் ஈ) நடந்தாய்

9) வட்டத்தொட்டி என்பது ________ தொகைச் சொல்

அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை
இ) வேற்றுமைத்தொகை ஈ) உவமைத்தொகை

10) கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது - இத்தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற் பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே

அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்

11) நறுந்தொகை என்னும் நூலை இயற்றியவர் ________

அ) சீவலமாறன் ஆ) ஔவையார் இ) நாகூர்ரூமி ஈ) பாரதியார்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடைதருக.

உறங்குகின்ற கும்பகன்ன! உங்கள் மாய வாழ்வெலாம்
இறங்குகின்றது இன்று காண் எழுந்திராய்! எழுந்திராய்!
கறங்குபோல வில்பிடித்த காலதூதர் கையிலே
உறங்குவாய்! உறங்குவாய்! இனிக்கிடந்து உறங்குவாய்!'

12) இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?
அ) காசிக் காண்டம் ஆ) சிலப்பதிகாரம் இ) மணிமேகலை ஈ) கம்பராமாயணம்

13) கறங்கு என்பதன் பொருள்.
அ) காற்றாடி ஆ) காற்று இ) குறங்கு ஈ) காலன்

14) சீர்மோனைச் சொற்களை எழுதுக
அ) உறங்குகின்ற, இறங்குகின்ற ஆ) உறங்குகின்ற, உங்கள்
இ) உறங்குகின்ற, கறங்குபோல ஈ) உறங்குகின்ற, வாழ்வெலாம்

15) 'மாய' என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக.
அ) பொய்யான ஆ) மெய்யான இ) தலைகீழான ஈ) நேரான

## பகுதி - II

### பிரிவு- 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
21வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 4×2=8

16) மருத நில மக்களின் உணவுப் பொருட்கள் யாவை?
17) கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன்?
18) குறிப்பு வரைக:- அவையம்
19) 'தலைக்கனமே வாழ்வு' என்று யாருடைய வாழ்வை நாகூர் ரூமி கூறுகிறார்?
20) நம் தமிழகத்தில் காற்றாலை மின் உற்பத்தி பற்றி எழுதுக
21) 'வினை' என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5×2=10

22) ரவிவர்மா ஓவியர். கலைக்கூடம் சென்றார். அவர் யார்?
இத்தொடர்களில் தொடரும் பயனிலைகள் யாவை?

23) வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.
பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.
ஊட்டமிகு உணவு உண்டார். நீண்ட வாழ்நாள் பெற்றார்.

24) ஆசிரியப்பாவின் வகைகள் யாவை?

25) கலைச் சொல் தருக. Tornado, Patent
குறிப்பு: செவிமாற்றுத் திறனாளர்க்கான மாற்று வினா
பொருத்துக:
கல் - கட்டு
புல் - குலை
பழம் - குவியல்

26) பழமொழியை நிறைவு செய்க.
அளவுக்கு ................................
ஒருபானை ................................

27) பகுபத உறுப்பிலக்கணம் தருக. மலைந்து

28) சொற்களில் மறைந்துள்ள தொகைகளை எழுதுக. அ) எழுகதிர் ஆ) முத்துப்பல்

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும்.** 2×3=6

29) சோலைக்காற்றும் மின்விசிறிக்காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடலை அமைக்க

30) சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்களில் கொடை பற்றி எழுதுக.

31) உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

ராகுல் சாங்கிருத்யாயன் 1942ஆம் ஆண்டு ஹிஜிராபாக் மத்திய சிறையில் இருந்தபோது 'வால்க்காவிலிருந்து கங்கை வரை' என்ற நூலை இந்தி மொழியில் எழுதினார். 1949ஆம் ஆண்டு இந்நூலை கணமுத்தையா என்பவர் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். இந்நூல் ஒவ்வொரு தமிழரும் விரும்பிப்படிக்கும் நூலாக இருக்கிறது.

அ) வால்க்காவிலிருந்து கங்கைவரை என்ற நூல் யாரால் எப்போது எழுதப்பட்டது?
ஆ) இந்நூலைத் தமிழில் யார்? எப்போது மொழிபெயர்த்தார்?
இ) இந்நூல் எம்மொழியில் எழுதப்பட்டது? எம்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.**
**34-ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 2×3=6

32) வைத்திய நாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை எழுதுக.

33) 'தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

34) அடி பிறழாமல் எழுதுக.
**சிறுதாம்பு .........**" எனத் தொடங்கும் முல்லைப் பாட்டு **(அல்லது)**
**"நவமணி............."** எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடலை எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2×3=6

35) உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு எழுதுக.

36) தன்மையணியை எடுத்துக்காட்டுடன் விளக்கி எழுதுக.

37) விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர். - இக்குறட்பாவில் அமைந்த பொருள்கோளை விளக்குக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5×5=25

38) ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக அமைந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக. **(அல்லது)**
காலக்கணிதம் கவிதையில் கண்ணதாசன் நயம்படக் கூறியவற்றை எழுதுக.

39 உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலைகூடுதலாகவும் இருந்தது குறித்து உணவு பாதுகாப்பு ஆணையருக்கு கடிதம் எழுதுக. **(அல்லது)**
'செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக்கலை' என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்க கட்டுரை எழுதுக.

40) காட்சியைக் கண்டு கவினுற கவிதை ஒன்றை எழுதுக..



41) [illegible] வாய்ப்பு வேண்டி தன் விவரப்படிவம் நிரப்புக:

42) பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல் - குறித்து செயல் திட்ட வரைவு ஒன்றை உருவாக்குக.

(அல்லது)

மொழி பெயர்க்க

Among the five geographical division of the Tamil country in Sangam literature the Marutham region was the fit for cultivation as it had the most fertile lands. The farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil.

குறிப்பு:- செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.

உரைப்பத்தியைப் படித்து விடை எழுதுக.

செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு மென்பொருள். அது தானாகக் கற்றுக் கொள்ளக் கூடியது. செயற்கை நுண்ணறிவு இயந்திரங்களுக்கு ஓய்வு தேவையில்லை. செயற்கை நுண்ணறிவால் பார்க்கவும் புரிந்து கொள்ளவும் கேட்கவும் முடியும் என்பதே அதன் சிறப்பு. மனிதனால் கடினம் என்று கருதும் செயல்களையும் செய்யக்கூடியது செயற்கை நுண்ணறிவு இயந்திரம். கண்காணிப்பு கேமரா, தானியங்கிக் கதவு போன்றவை செயற்கை நுண்ணறிவு இயந்திரங்களுக்கு எடுத்துக் காட்டுகளாகும்.

1) செயற்கை நுண்ணறி என்பது யாது?
2) செயற்கை நுண்ணறிவு இயந்திரங்களுக்கு ஓய்வு தேவையா?
3) செயற்கை நுண்ணறிவு இயந்திரங்கள் தானாகக் கற்குமா?
4) மனிதனால் முடியாத கடினமான வேலையைச் செயற்கை நுண்ணறிவு இயந்திரம் செய்து முடிக்குமா?
5) செயற்கை நுண்ணறிவு இயந்திரங்களுக்கு எடுத்துக் காட்டுகள் தருக.

## பகுதி - V

அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்கவும். 3×8=24

43) அ) நிகழ்கலை வடிவங்கள் - அவை நிகழும் இடங்கள் - அவற்றின் ஒப்பனைகள் - சிறப்பும் பழமையும் - இக்கலைகள் அருகிவருவதற்கான காரணங்கள் - அவற்றை வளர்க்க நாம் செய்ய வேண்டுவன - இவை குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டு முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - இக்குறிப்புக்களைக் கொண்டு ஒரு பக்க அளவில் மாணவப்பருவமும் நாட்டுப்பற்றும் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

44) அ) புயலிலே ஒரு தோணி கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடரும் புயலில் தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

(அல்லது)

ஆ) அழகிரி சாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

45) அ) நீங்கள் படித்த கதை / கட்டுரை / சிறுகதை / நூலுக்கான மதிப்புரை எழுதுக. நூலின் தலைப்பு - மையப்பொருள் - மொழிநடை - நூல் வெளிப்படுத்தும் கருத்து - நயம் - சிறப்புக் கூறுகள் - நூல் ஆசிரியர்.

(அல்லது)

ஆ) மரம் 'இயற்கையின் வரம் எனும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

...............